CODE : XI 22

பதிவெண்
Roll No.

கால அளவு : 2 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கானது)

## தேர்வு எழுதுபவர்களுக்கான அறிவுரைகள்

வினா நூல் தொகுப்பைத் திறப்பதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. இவ்வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டது.
2. அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
3. விடைகளை **OMR** விடைத்தாளில் குறிக்க வேண்டும்.
4. ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளிலிருந்து சரியான விடையினைக் கண்டறிந்து அதை **OMR** விடைத்தாளில் உரிய வட்டத்தில் கருப்பு நிற பந்து முனைப் பேனாவினால் நிழலிடப்பட (Shading) வேண்டும். '✓' மற்றும் '✗' ஆகிய குறியீடுகளை **OMR** விடைத்தாளில் குறிக்கக் கூடாது.
5. விடைகளை கண்டறிய மேற்கொள்ளும் வழிமுறைகளை வினா நூல் தொகுப்பில் எங்கு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். **OMR** விடைத்தாளிலோ அல்லது தனித்தாளிலோ செய்யக்கூடாது.
6. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பையோ அல்லது **OMR** விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.
7. தேர்வு முடிந்த பிறகு **OMR** விடைத்தாளை மட்டும் அறைக்கண்காணிப்பாளரிடம் கொடுக்கவும். வினாநூல் தொகுப்பை தேர்வர் எடுத்துச் செல்லலாம்.
8. ஏதேனும் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படின் ஏழு இலக்க பதிவெண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

**பக்கத்தைத் திருப்பிப் பதிலளிக்கத் தொடங்கவும்.**

1. ''மெய்ப்பொருள் காண்ப தறிவு''

- இக்குறளடிக்குப் பொருத்தமான வாய்ப்பாடு.

(அ) புளிமா தேமா மலர் (ஆ) தேமா தேமா பிறப்பு

(இ) கூவிளம் தேமா பிறப்பு (ஈ) கருவிளம் தேமா மலர்

2. ஓரிடத்தில் நின்ற சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருள் விளக்குவது :

(அ) விளக்கணி (ஆ) மடக்கணி

(இ) நிரல் நிறை அணி (ஈ) தீவக அணி

3. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | துடிப்பறை | (i) | குறிஞ்சி |
| (2) | மணமுழா | (ii) | பாலை |
| (3) | தொண்டகம் | (iii) | முல்லை |
| (4) | ஏறுகோட்பறை | (iv) | மருதம் |

(அ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

(ஆ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii)

4. கீழ்க்காண்பவற்றுள் காலங்கரந்த பெயரெச்சத்திற்கு பொருந்தாத சொல்லைத் தேர்க.

(அ) மெய் முறை (ஆ) காய்மணி (இ) உய் முறை (ஈ) செய் முறை

5. மயங்கிய - இப்பகுபதத்தில் இடம் பெற்றுள்ள இடைநிலை :

(அ) க் (ஆ) இ(ன்) (இ) ய் (ஈ) அ

6. வெண்பாவின் இலக்கணங்களுள் பொருந்தாதவற்றைத் தேர்க.

(i) செப்பலோசை பெற்று வரும்

(ii) ஈற்றடி முச்சீராக வரும்

(iii) ஏனைய அடிகள் அறுசீராக வரும்

(iv) விளச்சீர் மட்டுமே பயின்று வரும்

(அ) (i), (ii) (ஆ) (ii), (iii) (இ) (iii), (iv) (ஈ) (i), (iv)

7. கீழ்க்காண்பவற்றுள் கவிதை நூல் அல்லாததைத் தேர்க.

(அ) தேன் மழை (ஆ) நாற்காலிக்காரர்

(இ) சிறுமியும் தேவதையும் (ஈ) குயில் பாட்டு

8. கு.ப.ரா. ஆசிரியராகப் பணியாற்றாத இதழ் :

(அ) பாரத மணி (ஆ) பாரத தேவி (இ) தமிழ் நாடு (ஈ) கலைமகள்

9. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | நேர் நேர் நிரை | (i) | கூவிளங்கனி |
| (2) | நிரை நேர் நிரை | (ii) | தேமாங்கனி |
| (3) | நிரை நிரை நிரை | (iii) | புளிமாங்கனி |
| (4) | நேர் நிரை நிரை | (iv) | கருவிளங்கனி |

(அ) (1) - (ii), (2) - (iii), (3) - (i), (4) - (iv)

(ஆ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(இ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)

10. 'கம்பன், பாரதி, தாசன் சொல்லாதன சில சொல்லிட முனைவேன்' - என்றவர்.

(அ) கண்ணதாசன் (ஆ) வாணிதாசன் (இ) புவியரசன் (ஈ) சுப்புரத்தின தாசன்

11. 'ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண் ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே' - என்று பாடியவர்.

(அ) தாயுமானவர் (ஆ) வள்ளலார் (இ) பட்டினத்தார் (ஈ) பத்திரகிரியார்

12. 'இவ்வொன்பான் ஒழுக்கமும் வழிபடும் பண்பே' - எனக் கூறும் நூல் :

(அ) திருக்குறள் (ஆ) நீதி வெண்பா (இ) நாலடியார் (ஈ) காசிக் காண்டம்

13. ''வள்ளலின் பொருள் இரவலரின் பொருள்;
வள்ளலின் வறுமை இரவலரின் வறுமை;'' - என்று கூறியவர்.

(அ) பெருஞ்சாத்தனார் (ஆ) நக்கீரர்

(இ) பெரும்பதுமனார் (ஈ) நல்வேட்டனார்

14. ‘பிழையா நன்மொழி’ என்று வாய்மையைக் குறிப்பிடும் நூல் :

(அ) நற்றிணை (ஆ) புறநானூறு (இ) சிலப்பதிகாரம் (ஈ) மணிமேகலை

15. ‘அரியவற்றுள் எல்லாம் அரிதே’ என்று வள்ளுவரால் குறிப்பிடப்படுவது :

(அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல்

(ஆ) மெய்ப்பொருள் காணுதல்

(இ) பெரியாரைப் பேணித் தமரா கொளல்

(ஈ) பல்லார் பகை கொளல்

16. ‘நந் தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர்பொருப்பிற்

செந்தமிழின் பின்னுதித்த தென்றலே’

- என்று தென்றல் காற்றைப் பாடியவர் :

(அ) அழகிய மணவாளதாசர் (ஆ) பலபட்டடைச் சொக்கநாதர்

(இ) அழகிய சொக்கநாதர் (ஈ) வெண்ணிக் குயத்தியார்

17. சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்தும் செப்பேடு :

(அ) திருவாலங்காட்டுச் செப்பேடு (ஆ) காசிச் செப்பேடு

(இ) வேள்விக்குடிச் செப்பேடு (ஈ) சின்னமனூர் செப்பேடு

18. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | நுழாய் | (i) | இளநெல் |
| (2) | கருக்கல் | (ii) | இளம் பாக்கு |
| (3) | கச்சல் | (iii) | பலாப் பிஞ்சு |
| (4) | மூசு | (iv) | வாழைப் பிஞ்சு |

(அ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(ஆ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

(இ) (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii)

(ஈ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

19. ‘செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்’
- இக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம்.
(அ) கண்ணோட்டம் (ஆ) அமைச்சு
(இ) பொருள் செயல் வகை (ஈ) பகை மாட்சி

20. குடும்பம் வறுமையுற்ற நிலையிலும் உணவளிப்பதற்காக பணையம் வைத்த பொருளாக புறநானூறு குறிப்பிடுவது :
(அ) விளை நிலம் (ஆ) குடியிருப்புகள்
(இ) பழைய வாள் (ஈ) பரிசுப் பொருட்கள்

21. சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல் :
(அ) நற்றிணை (ஆ) குறுந்தொகை (இ) புறநானூறு (ஈ) பரிபாடல்

22. சங்க காலத்தில் ‘நற்சொல் கேட்டல்’ என்னும் பொருளமைந்த சொல் :
(அ) விரிச்சி (ஆ) தழிஞ்சி (இ) கொடிச்சி (ஈ) வெட்சி

23. இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் இயற்றிய நூல் :
(அ) பரிபாடல் (ஆ) கூத்தராற்றுப்படை
(இ) சிறுபாணாற்றுப்படை (ஈ) முல்லைப் பாட்டு

24. **தவறாக** பகுக்கப்பட்ட சொல்லைத் தேர்க.
(அ) பொறித்த - பொறி + த் + த் + அ
(ஆ) வருக - வா (வரு) + க் + அ
(இ) தணிந்தது - தணி + த்(ந்) + த் + அ + து
(ஈ) மயங்கிய - மயங்கு + இ(ன்) + ய் + அ

25. ‘குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு’
- இக்குறட்பாவின் முதல் இரு சீர்களுக்கிடையே இடம்பெற்றுள்ள தளை.
(அ) இயற்சீர் வெண்டளை (ஆ) வெண்சீர் வெண்டளை
(இ) கலித் தளை (ஈ) நிரையொன்றிய ஆசிரியத் தளை

26. தொழிற்பெயர் விகுதி அல்லாத ஒன்று :

(அ) தல் (ஆ) கை (இ) அல் (ஈ) அன்

27. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற தன் வீரர்களுடன் கோட்டையைச் சுற்றி வளைத்தல் :

(அ) தும்பைத் திணை (ஆ) உழிஞைத் திணை

(இ) நொச்சித் திணை (ஈ) காஞ்சித் திணை

28. 'கைதொழுது' என்பதன் இலக்கணக் குறிப்பு :

(அ) இரண்டாம் வேற்றுமைத் தொகை

(ஆ) மூன்றாம் வேற்றுமைத் தொகை

(இ) ஆறாம் வேற்றுமைத் தொகை

(ஈ) ஏழாம் வேற்றுமைத் தொகை

29. பின்வருவனவற்றுள் **பொருந்தாத** ஒன்றைத் தேர்க.

(அ) ஓஒதல் (ஆ) உறாஅர் (இ) படா அ (ஈ) நசை இ

30. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் ஒற்றெழுத்துக்களுள் **பொருந்தாத** எழுத்தைத் தேர்க.

(அ) ந் (ஆ) ன் (இ) ழ் (ஈ) ள்

31. ''தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ''

- என்ற தொடரோடு தொடர்புடைய இருவர் :

(அ) வீடணன், அனுமன் (ஆ) அனுமன், சுக்ரீவன்

(இ) சுக்ரீவன், இராமன் (ஈ) இராமன், குகன்

32. சண்முகசுந்தரம் என்னும் இயற்பெயர் கொண்டவர் :

(அ) தமிழழகனார் (ஆ) க. சச்சிதானந்தன்

(இ) பெருஞ்சித்தரனார் (ஈ) பாவாணர்

33. 'இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய கண்ணாடிகளைப் போல் வடபுறமும், தென்புறமும் நிறைந்த கண்மாய்கள்'' என நா. பார்த்தசாரதி வர்ணிக்கும் ஊர் :

(அ) திருத்தணி (ஆ) திருச்செந்தூர்

(இ) திருக்கழுக்குன்றம் (ஈ) திருப்பரங்குன்றம்

**34.** முப்பழமொடு பால் அன்னம்

முகம் கடுத்து இடுவாராயின்

கப்பிய பசியி னோடு

கடும் பசி ஆகும் தானே

- எனும் பாடலடிகள் இடம்பெற்ற நூல்.

(அ) விவேக சிந்தாமணி  (ஆ) அபிதான சிந்தாமணி

(இ) வளையாபதி  (ஈ) சீவகசிந்தாமணி

**35.** பின்வருவனவற்றுள் **சரியான** வரிசையைக் காண்க.

(அ) தால், காப்பு, செங்கீரை, சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி

(ஆ) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி

(இ) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி

(ஈ) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, அம்புலி, முத்தம், வருகை

**36.** வீரமாமுனிவர் இயற்றிய அகராதி :

(அ) பேரகராதி  (ஆ) சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி

(இ) சதுரகராதி  (ஈ) செந்தமிழ் சொற்பிறப்பியல் அகராதி

**37.** அதிவீரராம பாண்டியரின் நூல்களுள் அல்லாததைத் தேர்க.

(அ) நைடதம்  (ஆ) லிங்க புராணம்

(இ) கருட புராணம்  (ஈ) வாயு சம்கிதை

**38.** **பொருந்தாத** இணையைத் தேர்க.

(அ) மண்ணீட்டாளர் - சிற்பி

(ஆ) கண்ணுள் வினைஞர் - ஓவியர்

(இ) ஓசுநர் - எண்ணெய் விற்போர்

(ஈ) பாசவர் - மீன் விற்பவர்

**39.** 'விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண

மேன்மேலும் முகமலரும் மேலோர் போல' - எனப் பாடியவர்.

(அ) கம்பர்  (ஆ) ஜெயங்கொண்டார்

(இ) புகழேந்திப் புலவர்  (ஈ) ஔவையார்

**40.** ‘கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு’

- இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொல்லால் குறிக்கப்படுபவர்.

(அ) இடைக்காடனார் (ஆ) கபிலன்

(இ) குலேச பாண்டியன் (ஈ) இறைவன்

**41.** தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது :

(அ) திருக்குறள் (ஆ) புறநானூறு

(இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்

**42.** ‘‘உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தாலும்

புளிக்காத பால்!

தந்தை தந்த தாய்ப்பால் முப்பால்!’’

- எனத் திருக்குறளைக் கவிதையால் புகழ்ந்தவர்.

(அ) கவிமணி (ஆ) புதுமைப்பித்தன்

(இ) அறிவுமதி (ஈ) பாரதியார்

**43.** துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ள நூல் :

(அ) மலைபடு கடாம் (ஆ) முல்லைப் பாட்டு

(இ) காசிக் காண்டம் (ஈ) சீவகசிந்தாமணி

**44.** ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது :

(அ) சண்பகம் (ஆ) பிரம்ம கமலம் (இ) குறிஞ்சி (ஈ) கொன்றை

**45.** ‘கொண்டல்’ காற்றின் வேறு பெயரைத் தேர்க.

(அ) ஊதைக் காற்று (ஆ) மழைக் காற்று

(இ) வெப்பக் காற்று (ஈ) நறுமணக் காற்று

**46.** ‘வாழையிலை விருந்து விழா’வை ஆண்டுதோறும் கொண்டாடும் மினசோட்டா தமிழ்ச் சங்கம் அமைந்துள்ள நாடு :

(அ) சிங்கப்பூர் (ஆ) தாய்லாந்து (இ) அமெரிக்கா (ஈ) இங்கிலாந்து

**47.** ''நடுங்கு <u>சுவல்</u> அசைத்த கையள்'' - அடிக்கோடிட்ட சொல்லுக்குரிய பொருள் :

(அ) கன்னம் (ஆ) கைகள் (இ) பற்கள் (ஈ) தோள்

**48.** 'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்' என்னும் விருந்தோம்பல் குறித்த பாடலடி இடம் பெற்றுள்ள நூல் :

(அ) குறுந்தொகை (ஆ) அகநானூறு (இ) கலித்தொகை (ஈ) நற்றிணை

**49.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | நரலும் | (i) | தங்கி |
| (2) | வயிரியம் | (ii) | இளைப்பாறி |
| (3) | அசை இ | (iii) | ஒலிக்கும் |
| (4) | அல்கி | (iv) | கூத்தர் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(ஆ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

**50.** ''வளி மிகின் வலி இல்லை'' - இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் :

(அ) அகநானூறு (ஆ) சிலப்பதிகாரம் (இ) புறநானூறு (ஈ) கலித்தொகை

**51.** 'பாடு இமிழ் பனிக்கடல்' - இதில் 'பாடு' என்பதன் பொருள் :

(அ) இசைக்கின்ற (ஆ) உழைக்கின்ற (இ) ஒலிக்கின்ற (ஈ) கத்துகின்ற

**52.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | கபிலர் | (i) | பெருஞ்சாத்தன் |
| (2) | நக்கீரர் | (ii) | மலையமான் திருமுடிக்காரி |
| (3) | பரணர் | (iii) | குமணன் |
| (4) | பெருந்தலைச் சாத்தனார் | (iv) | பேகன் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஆ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(இ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)

53. அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதி கற்பனை செய்து உரைநடையில் எழுதுவதற்கு வழங்கும் பெயர் :

(அ) இணை ஒப்பு (ஆ) இலக்கணை

(இ) எதிரிணை இசைவு (ஈ) முரண்படு மெய்

54. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் :

(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) கலிப்பா (ஈ) வஞ்சிப்பா

55. வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களைக் கூட்டுநிலைப் பெயரெச்சங்களாக உருவாக்கும் வினையெச்ச வாய்பாடு :

(அ) செய்யிய (ஆ) செய்ப்பு (இ) செய்வென் (ஈ) செய

56. சந்திப் பிழைகளற்ற தொடரைத் தேர்க.

(அ) பருத்திச் செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்

(ஆ) பருத்தி செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்

(இ) பருத்தி செடிகளை அவள் மிகவும் கவனமாக பார்த்துக் கொண்டிருந்தாள்

(ஈ) பருத்திச் செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்து கொண்டிருந்தாள்

57. 'கண் வலிக்கும்' என்பது :

(அ) இனமொழி விடை (ஆ) உற்றது உரைத்தல் விடை

(இ) உறுவது கூறல் விடை (ஈ) நேர் விடை

58. கீழ்க்காண்பவற்றுள் **தவறான** கூற்றைத் தேர்க.

(அ) காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்.

(ஆ) இரு சொற்களுக்கிடையே மட்டும் 'உம்' எனும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகையாகும்.

(இ) உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத் தொகையாகும்.

(ஈ) தொகை நிலைத் தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித் தொகை எனப்படும்.

**59.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | நெய்தல் | (i) | மாலை |
| (2) | குறிஞ்சி | (ii) | நண்பகல் |
| (3) | பாலை | (iii) | எற்பாடு |
| (4) | முல்லை | (iv) | யாமம் |

(அ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (iv), (2) - (ii), (3) - (i), (4) - (iii)

(ஈ) (1) - (ii), (2) - (iii), (3) - (i), (4) - (iv)

**60.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | மொழி ஞாயிறு | (i) | க. அப்பாத்துரையார் |
| (2) | பன்மொழிப் புலவர் | (ii) | ந. முத்துசாமி |
| (3) | சதாவதானி | (iii) | தேவநேயப் பாவாணர் |
| (4) | கலை ஞாயிறு | (iv) | செய்கு தம்பிப் பாவலர் |

(அ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

(ஆ) (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

(இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)

(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

**61.** 'இவ்வுலகில் யாரும் அநாதை இல்லை; துணையாக ஒருவரேனும் உண்டு'
- என்பதைத் தனது கதையின் மூலம் வெளிப்படுத்திய கரிசல் எழுத்தாளர்.

(அ) இராஜம் கிருஷ்ணன் (ஆ) கி. இராஜ நாராயணன்

(இ) கு. அழகிரிசாமி (ஈ) சோ. தர்மன்

**62.** நாகூர் ரூமியின் கவிதைத் தொகுப்பு நூல்களுள் ஒன்று :

(அ) சொல்லாத சொல் (ஆ) சிவப்புக் கழுத்துடன் பச்சைப் பறவை

(இ) வெறும் பொழுது (ஈ) புதிய உரைநடை

**63.** 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தவர் :

(அ) விஜயரங்க சொக்கநாதர் (ஆ) சந்தா சாகிப்

(இ) ரகுராம் தொண்டைமான் (ஈ) ராஜாராம் தொண்டைமான்

**64.** பெருஞ்சித்திரனாரின் நூல்களுள் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் :

(அ) பாவியக் கொத்து (ஆ) உலகியல் நூறு

(இ) கனிச்சாறு (ஈ) திருக்குறள் மெய்ப்பொருளுரை

**65.** 'இமயத்துக்கு அப்பால்' என்னும் நூலிற்காக எழுத்தாளர் ஜெயகாந்தன் பெற்ற விருது :

(அ) குடியரசுத் தலைவர் விருது (ஆ) ஞானபீட விருது

(இ) தாமரைத் திரு விருது (ஈ) சோவியத் நாட்டு விருது

**66.** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் திருமொழித் தொகுப்புகளுள் பெருமாள் திருமொழி என்பது :

(அ) மூன்றாவது திருமொழி (ஆ) நான்காவது திருமொழி

(இ) ஐந்தாவது திருமொழி (ஈ) ஆறாவது திருமொழி

**67.** 'நன்றும் தீதும் ஆய்தலும் ________

________ காத்தலும் அமைச்சர் கடமை'

- இப்பாடலடிகளில் இடம்பெற வேண்டிய விடுபட்ட சீர்களைத் தேர்க.

(அ) அன்பும் அறனும் (ஆ) செல்வமும் புகழும்

(இ) பாதுகாப்பும் வளமும் (ஈ) பண்பும் பயனும்

**68.** 'ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்

பொருத்துவதும் கல்வியென்றே போற்று'

- இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் :

(அ) நீதி வெண்பா (ஆ) பரிபாடல்

(இ) நற்றிணை (ஈ) பெருமாள் திருமொழி

**69.** திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் :

(அ) ஒட்டக்கூத்தர் (ஆ) நக்கீரர்

(இ) பரஞ்சோதி முனிவர் (ஈ) அதிவீரராம பாண்டியர்

**70.** குமரகுருபரர் குறித்த கூற்றுகளுள் **தவறானதைத்** தேர்க.

(அ) கி.பி. 17 -ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்

(ஆ) திருக்கை வழக்கம் என்பது இவர் எழுதிய நூல்களுள் ஒன்று

(இ) மதுரைக் கலம்பகம் உள்ளிட்ட சிற்றிலக்கியங்கள் பலவற்றைப் படைத்தவர்

(ஈ) இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்

**71.** 'வாழ்நாளை நீட்டிக்க, மூச்சுப் பயிற்சியே உடலுக்கு உகந்தது' - என்று கூறிய நூல் :

(அ) திருவாசகம் (ஆ) தேவாரம் (இ) திருமந்திரம் (ஈ) நேமிநாதம்

**72.** 'மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்''

- இக்குறளடியால் உணர்த்தப்படும் மூன்றாவன.

(அ) மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை

(ஆ) காமம், வெகுளி, மயக்கம்

(இ) ஆணவம், கன்மம், மாயை

(ஈ) மனம், மொழி, மெய்

**73.** பொருத்தி விடை தேர்க.

| **படைப்புகள்** | | | **கருப்பொருள்** |
|---|---|---|---|
| (1) | கரிப்பு மணிகள் | (i) | பெண் சிசுக் கொலை |
| (2) | குறிஞ்சித் தேன் | (ii) | உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வியல் |
| (3) | கூட்டுக் குஞ்சுகள் | (iii) | படுகர் இன மக்களின் வாழ்வியல் |
| (4) | மண்ணகத்துப் பூந்துளிகள் | (iv) | தீப்பெட்டித் தொழிலில் சிறார்களின் அவலநிலை |

(அ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

**74.** 'Telemetry' எனும் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் :

(அ) தொலைவரி (ஆ) தொலைநகல்

(இ) தொலைஅளவியல் (ஈ) தொலைநோக்கி

**75.** ‘‘காசினியில் இன்று வரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்’’ - என்றவர் :

(அ) குலேச பாண்டியன் (ஆ) பாரதியார்

(இ) குலோத்துங்கன் (ஈ) அதிவீரராம பாண்டியர்

**76.** ‘களிஇயல் யானைக் கரிகால் <u>வளவ</u> !’

- இப்பாடலடியில் வரும் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு.

(அ) சேய்மை விளி (ஆ) அசை நிலை

(இ) பிரி நிலை (ஈ) அண்மை விளி

**77.** ‘நெருப்புப் பந்துபோல் வந்து குளிர்ந்ததால் உண்டானது பூமி’

- என்னும் அறிவியல் கருத்தினை விளக்கிய நூல்.

(அ) பரிபாடல் (ஆ) மூதுரை

(இ) புறநானூறு (ஈ) பெரியபுராணம்

**78.** விதைத்துவிட்டு வந்த விதைநெல்லை அரித்து வந்து விருந்தினருக்குச் சமைத்து விருந்தளித் திட்டவர்.

(அ) ஏனாதிநாத நாயனார் (ஆ) இளையான்குடி மாறநாயனார்

(இ) இயற்பகை நாயனார் (ஈ) மெய்ப்பொருள் நாயனார்

**79.** ‘குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்’ - எனக் கூறியவர் :

(அ) ஊன் பொதிப் பசுங்குடையார் (ஆ) மாங்குடி மருதனார்

(இ) ஆவூர் மூலங்கிழார் (ஈ) முடமோசியார்

**80.** ‘சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலை புனைந்தான்’

- என்ற பாடலடி இடம்பெற்ற நூல்.

(அ) மெய்க்கீர்த்தி (ஆ) திருத்தணிகை யுலா

(இ) சிலப்பதிகாரம் (ஈ) இராசராச சோழனுலா

**81.** ''நண்பா, எழுது!'' - இவ்விளித்தொடரை எழுவாய்த் தொடராக்குக.

(அ) நண்பனே எழுது (ஆ) நண்பன் எழுதினான்

(இ) எழுது நண்பனே (ஈ) எழுதினான் நண்பன்

**82.** மருதநிலக் 'கருப்பொருள்' பட்டியலில் இடம்பெறாத பறவை :

(அ) நாரை (ஆ) வாத்து (இ) நீர்க் கோழி (ஈ) அன்னம்

**83.** 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்'

- இக்குறட்பாவில் பயின்றுவரும் பொருள்கோள்.

(அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

(ஆ) எதிர் நிரல்நிரைப் பொருள்கோள்

(இ) மொழிமாற்றுப் பொருள்கோள்

(ஈ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

**84.** **கூற்று** 1 : ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் 'புகாகோ சுசுகி'.

**கூற்று** 2 : இந்தியாவின் பாரத ஸ்டேட் வங்கி உருவாக்கிய உரையாடு மென்பொருள் 'இலா'.

மேற்காண்பவற்றுள் **சரியான/தவறான** கூற்றைத் தேர்க.

(அ) **கூற்று** 1 சரி, **கூற்று** 2 தவறு

(ஆ) **கூற்று** 1 தவறு, **கூற்று** 2 சரி

(இ) **கூற்று** 1 மற்றும் 2 சரி

(ஈ) **கூற்று** 1 மற்றும் 2 தவறு

**85.** நிகழும் திருவள்ளுவராண்டிற்குரிய தமிழ் எண்களைத் தேர்க.

(அ) ௨௦௨௩ (ஆ) ௨௦௩௩ (இ) ௨௦௪௩ (ஈ) ௨௦௫௩

**86.** 'கத்துங் குயிலோசை' என்னும் தொடரில் அமைந்துள்ள வழுவமைதி :

(அ) ஒலி வழுவமைதி (ஆ) இசை வழுவமைதி

(இ) மரபு வழுவமைதி (ஈ) கால வழுவமைதி

**87.** பொருந்தாத இணைகளைத் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | Ultraviolet rays | - | புற ஊதாக் கதிர்கள் |
| (2) | Cosmic rays | - | ஓசோன் கதிர்கள் |
| (3) | Revivalism | - | மீட்டுருவாக்கம் |
| (4) | Renaissance | - | புதிய நம்பிக்கை |

(அ) 1, 2 (ஆ) 2, 3 (இ) 3, 4 (ஈ) 2, 4

**88.** 'மொகு சாஸ்ட்டு' என்னும் ஜப்பானிய மொழிச் சொற்றொடருக்கு இணையான தமிழ்மொழிச் சொற்றொடரைத் தேர்க.

(அ) விடை தர வேண்டும்

(ஆ) விடை தர மறுக்கிறேன்

(இ) விடை தர அவகாசம் வேண்டும்

(ஈ) விடை தர வேண்டிய அவசியமில்லை

**89.** ''ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்! லெக்காஸ், லெக்காஸ்'

- இத்தொடரின் கூற்றுக்குரியவர்.

(அ) பாண்டியன் (ஆ) கப்பித்தான் (இ) தொங்கான் (ஈ) பிலவான்

**90.** 'மக்களே போல்வர் கயவர் அவரன்ன

ஒப்பாரி யாம்கண்ட தில்'

- இக்குறட்பாவில் பயின்றுவரும் உருபு.

(அ) வேற்றுமை உருபு (ஆ) உவம உருபு

(இ) சொல் உருபு (ஈ) பயன் உருபு

**91.** **கூற்று** 1 : பொன்ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

**கூற்று** 2 : இந்நிகழ்வு ஆடித்திங்களில் நடைபெறும்.

மேற்காண்பவற்றுள் **சரியான/தவறான** கூற்றினைத் தேர்க.

(அ) **கூற்று** 1 சரி, **கூற்று** 2 தவறு (ஆ) **கூற்று** 1 தவறு, **கூற்று** 2 சரி

(இ) **கூற்று** 1 மற்றும் 2 சரி (ஈ) **கூற்று** 1 மற்றும் 2 தவறு

**92.** அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து, அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளே பொதிந்திருக்கும் மலர்களுள் பொருந்தாத ஒன்றினை தேர்க.

(அ) கொழிஞ்சி (ஆ) நெருஞ்சி (இ) அத்தி (ஈ) ஆலம்

**93.** 'தேர்வண் பாரிதண் பறம்பு நாடே'

- இப்பாடலடியில் குறிப்பிடப்படும் 'பறம்பு மலை' அமைந்துள்ள மாவட்டம்.

(அ) தருமபுரி (ஆ) ஏற்காடு

(இ) சிவகங்கை (ஈ) திருவண்ணாமலை

**94.** 'காற்றிசை' என்னும் சொல்லின் பிரிப்பு முறை 'காற்று + இசை' எனில் 'நாற்றிசை' என்னும் சொல்லின் பிரிப்பு முறை :

(அ) நாற்று + இசை (ஆ) நாலு + திசை

(இ) நான்கு + திசை (ஈ) நால் + திசை

**95.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | செறு | (i) | வயல் |
| (2) | பழனம் | (ii) | பகை |
| (3) | புறவு | (iii) | பள்ளம் |
| (4) | அவல் | (iv) | தோட்டம் |

(அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(இ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

(ஈ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

**96.** 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்னும் கூற்றினால் உந்தப்பட்டு, குப்பைக் கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை உருவாக்கியவர் :

(அ) ஹெலன் கெல்லர் (ஆ) அன்னை தெரசா

(இ) மேரி மெக்லியோட் பெத்யூன் (ஈ) மரியா மாண்டசோரி

**97.** தவறான இணைகளைத் தேர்க.

(1) பம்பை - தேவராட்டம்

(2) டோலக் - ஒயிலாட்டம்

(3) உறுமி - பொய்க்கால் குதிரையாட்டம்

(4) பறை - தப்பாட்டம்

(அ) 1, 2 (ஆ) 1, 3 (இ) 1, 4 (ஈ) 2, 4

**98.** 'கன்றின் குரல் கேட்டது தாய்ப்பசு பாலினைத் தந்தது'

- இச்சொற்றொடரின் வகையைத் தேர்க.

(அ) கலவைச் சொற்றொடர் (ஆ) தொடர் சொற்றொடர்

(இ) தனிச் சொற்றொடர் (ஈ) எதிர்மறைச் சொற்றொடர்

**99.** 'அடிகள் நீரே அருளுக' என்று கூறிய புலவரிடம் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று மறுமொழி கூறினார் மற்றொரு புலவர்

- இவ்வுரையாடலை நிகழ்த்திய புலவர்கள்.

(அ) கம்பர், ஒட்டக்கூத்தர்

(ஆ) திருத்தக்கதேவர், உமறுப்புலவர்

(இ) புகழேந்தி, காளமேகம்

(ஈ) சீத்தலைச் சாத்தனார், இளங்கோவடிகள்

**100.** 'செல்வத்துப் பயனே ஈதல்' - இப்பாடலடி இடம்பெற்ற நூல் :

(அ) கலித்தொகை (ஆ) புறநானூறு (இ) திருக்குறள் (ஈ) நாலடியார்

- o 0 o -

## SPACE FOR ROUGH WORK